புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

================================================================

# ஐங்குறு நூற்றில் உள்ளுறை

================================================================

**ஆய்வாளர்**

*C.S. ஜீவிதா சாந்த குமாரி,*
*முனைவர் பட்ட ஆய்வு மாணவி,*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்*
*தமிழ்த்துறை,ஸ்காட் கிறிஸ்த்தவக் கல்லூரி ,*
*நாகர்கோவில்.*

**நெறியாளர்**

*R. ஜோஸ்லி திலகர்*
*தமிழ்த்துறை*
*ஸ்காட் கிறிஸ்த்தவக் கல்லூரி நாகர்கோவில்.*
*நாகர்கோவில்.*

================================================================

**ஆய்வுச் சுருக்கம் :**

*எட்டுத்தொகை நூல்களுள் மூன்றாவதாக இடம் பெற்றுள்ள அகஇலக்கியம் ஐங்குறுநூறு ஐங்குறுநூற்றில் ஒவ்வொரு திணைப் பாடல்கள் ஒவ்வொரு புலவரால் இயற்றப் பட்டுள்ளன. சங்க இலக்கியங்களுள் குறுகிய அடிகளாலான பாடல்கள் இடம்பெற்றுள்ள நூல் ஐங்குறு நூறு தொல்காப்பியரின் இலக்கிய கொள்கைகளில் ஒன்றான உள்ளுறை உவமம் ஐங்குறுநூற்று பாடல்களில் புலவர்கள் சிறப்பாக கையாண்டுள்ளனர்;. இலக்கியத்தின் சிறப்புக்கும் அதன் அக அமைப்பாகிய பாடு பொருளும் புற அமைப்பாகிய ஓசையும் மட்டுமன்றி பொருளை வெளிப்படுத்தும் உள்ளுறையை உத்தியாக கையாண்டுள்ளனர். மாந்தர் தம் அகஉணர்வை மறைமுகமாக குறிப்பாக உணர்த்த உள்ளுறையை சிறப்பாக கையாண்டுள்ளனர். உள்ளுறைக்கு இலக்கண ஆசிரியர்களும் உரையாசிரியர்களும் பல்வேறு விளக்கங்களை கூறியுள்ளனர். மேலும் இவ்வுள்ளுறை உவமையை உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என ஐந்தாக வகைப்படுத்தலாம். குறிஞ்சித் திணையில் காதல் கொள்ளும் தலைவன் தலைவியரின் சிறப்புகளை கூறுவதோடு இக்காதல் படிப்படியாக ஊராரால்*

அறியப்படுகிறது. இதனால் தோழி தலைவனை திருமணத்திற்கு விரைவு படுத்துவாள். இருமனங்கள் இணைவதை திருமணம் எனக் குறிப்பிடுவர். திருமணத்திற்கு பின் இல்லற வாழ்வின் சிறப்புகள் உள்ளுறையாக கூறப்பட்டுள்ளன. வினையே உயிராக கொண்ட ஆடவர் பொருள் தேடியோ அல்லது போருக்காகவோ தலைவியை பிரிந்து செல்வான் தலைவன். அவன் சென்ற இடத்தில் பறவைகள் விலங்கினங்கள் தாவரங்கள் தங்கள் இணைகளுடன் சுற்றித்திரிவதை பார்த்து மனங்கலங்குவதை உள்ளுறை வாயிலாக எடுத்துரைக்கப்படுகிறது. மருதப் பாடல்கள் பலவற்றில் தலைவியின் குழந்தைப் பிறப்பே தலைவன் பரத்தையரை நாடுவதற்கு முழுக்காரணம் என்று கூறப்படுகிறது. அவனது தவறை இடித்துரைத்து கூறும் விதமாக உள்ளுறை அமைந்துள்ளது. தலைவியின் துன்பத்தையும் மன இடர்பாட்டையும் உள்ளுறை மூலம் எடுத்துரைக்கப்படுகிறது. பாலை நிலப் பாடல்களில் தலைவனின் பிரிவால் தலைவி வருந்துவதை சில உள்ளுறைகள் மூலம் வெளிப்படுத்துவார் புலவர். மாந்தர் தம் உணர்வினை கருப்பொருட்களின் மூலம் வெளிப்படுத்துவதை ஐங்குறுநூற்றுப் பாடல்கள் மூலம் காணலாம்.

**முன்னுரை :**

தெரியாத பொருளைத் தெளிவாக்குவதற்கு உவமை கையாளப்படும். உவமை பல வகையில் அமையும் அவற்றுள் உள்ளுறை என்பது ஒரு வகை. தொல்காப்பியர் கூறிய உள்ளுறை கதை மாந்தர்களின் வாழ்க்கையைப் புரிதலுக்கும் கருத்தாடல் புரிதலுக்கும் பயன் படுகின்றன. இன்றைய நிலையில் அவை அகப்பாடல் புரிதலுக்கு அவசியமான கருத்தமைவுகளாகவே உள்;ளன.

**இலக்கண நூல்கள் கூறும் உள்ளுறை :**

சங்கப் பாடல்களில் அக உணர்வை மறைமுகமாக, குறிப்பாக உணர்த்த உள்ளுறையை சிறப்பாக கையாண்டுள்ளனர். உள்ளுறையைப் பற்றி தொல்காப்பியர், நம்பியகப் பொருள், மாறன் அகப்பொருள் முதலியன கூறும் நூற்பாக்களை இங்கு காணலாம்.

**தொல்காப்பியம் :**

தமிழ் இலக்கியத்தில் இலக்கிய கொள்கையை உருவாக்கியவர் தொல்காப்பியர். உள்ளுறை உவமமானது ஏனை வெளிப்படை உவமம் போல் அல்லாமல் உணர்வதற்கு அரியதாய் களவு> கற்பு ஆகிய இருவகைக் கைகோளின் கண்ணும் வினை> பயன்> மெய்> உறுப்பிறப்பென்னும் ஐவகை நிலைகளன்களை உடைய தெய்வம் ஒழிந்த கருப் பொருளைப் பற்றி சான்றோர் செய்யுள்கண் வரும் உவமம் வகையாகும்.

“தவலருஞ் சிறப்பினைத் தன்மை நாடின்

வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்

பிறப்பினும் வரூஉர் திறத்த வென்ப " 1

என்றும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். மேலும் உட்கருத்து ஒன்றை உள்ளே வைத்து அவ்வுட்பொருளுடன் வெளிப்படையாகச் சொன்ன உவமை ஒத்து முடியும்படி அமைக்கப்படுவது உள்ளுறை உவமம் இதனை,

*“உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென*

*உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்” 2*

*என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.*

***நம்பியகப் பொருள் குறிப்பிடும் உள்ளுறை :***

*உள்ளுறை உவமமானது ஆராய்ந்தறியும் பகுதியினை உடையதாய்ப் புள்ளொடும்,விலங்கொடும் பிறவொடும் தோன்றும் இதனை அவற்றுள்*

*' உள்ளுறை யுவமம் உய்த்துணர் வகைத்தாய்ப*

*புள்ளொடும், விலங்கொடும், பிறவொடும் புலப்படும்” 3*

*என்று நம்பி அகப்பொருள் குறிப்பிடுகிறது.*

***மாறன் அகப்பொருள் குறிப்பிடும் உள்ளுறை :***

*மாறன் அகப்பொருள் உள்ளுறை உவமையை*

*“உவமம் போலியே னையுவ மமெனத்*

*தவலருஞ் சிறப்புத் தருவாதொண் நாகத்*

*திணையுணர் வகைத்தாய் சேயிழை முதலோம்*

*கைகோளிரண்டினுங் கடனென மொழிய” **4***

*உள்ளுறை உவமம் ஏனை உவமம் என்னும் குற்றமற்ற சிறப்பினைத் தருவதாக திணையை உணரும் வகைபோல, தலைவி முதலானோர் களவு கற்பு என்னும் இரண்டு கைகோள்களிலும் இரண்டு என்னும் உவமைகளையும் கூறுவது கடனாகும்.*

***உள்ளுறை உவமைக்கு உரையாசிரியர் தரும் விளக்கம் :***

*“உள்ளுறைக் கண் வரும் உவமமும் ஒழிந்த உவமமும் என இருவகையாலும் திணை உணரும் வகை தப்பாதாகும்;” **5** என்று இளம்பூரணர் குறிப்பிடுகிறார். நச்சினார்க்கினியர், 'மேற்கூறும் உள்ளுறை உவமம் தான் ஏனைய உவமமென்று கூறும்படி உவமையும் உவமிக்கப்படும் பெருளுமாய் நின்றது. அகத்திணை உணர்த்தற்குக் கருவியாகிய உள்ளுறை உவமம் போல எல்லாத்திணையையும் உணருங் கூற்றைத் தள்ளாதாய் வரும், நல்லிசைப்புலவர் செய்யுட் செயின்" **6** என்று குறிப்பிடுகிறார். “உள்ளுறை உவமமானது திணை உணர்த்தும் கூறுபாட்டை ஏனையுவமம் உணர்த்தாது போலத் தான் தள்ளாது உணர்த்தும் என்றவாறு இதில் சொல்லியது உள்ளுறை உவமமே. உரிப்பொருளை உணர்த்தும் என்பதும் ஏனை உவமம் உரிப்பொருளைக் கொள்ளும் தொடர்பின்றி வரும்” **7** என்றும் சிவலிங்கனார் குறிப்பிடுகிறார்.*

***உள்ளுறை உவமம் வகைகள் :***

*உள்ளுறை உவமம் விலங்கு, மரம், பறவை, மலை, ஆகிய கருப்பொருட்கள் மூலம் விளக்கப் படுகின்றன. தலைவனைக் காண்பது முதல் மணம் செய்து கொள்வது வரை நிகழும் நிகழ்ச்சிகள் அனைத்தும் சங்க அகப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன். இவற்றைக் கொண்டு உள்ளுறை உவமைகளை உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என தொல்காப்பியர் வழி பிரித்துக் காணலாம்.*

*"உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்புஎனக்*

*கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே"8*

*உடனுறை - நான்கு நிலத்தும் உளவாய் அந்நிலத்துடன் உறையும் கருப் பொருள்*

*உவமம் - ஒத்து வருவது*

*சுட்டு - சுட்டுவதால் வரும் பொருள்*

*நகை - நகையினால் பிறிதொரு பொருள் உணர்த்தல்*

*சிறப்பு - ஒன்றை விட மற்றென்று சிறந்தது என்று குறிப்பிடுகின்றார்.*

**ஐங்குறு நூற்றில் உள்ளுறை :**

*அன்பின் ஐந்திணையான குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்னும் ஐந்து நிலம் சார்ந்த திணைகள் ஒவ்வொன்றிற்கும் நூறு பாடல்கள் வீதம் ஐநூறு அகத்திணைப்பாடல்கள் உள்ளன. ஆசிரியப்பாவில் அமைந்த 3 அடி சிற்றெல்லையும் 6 அடி பேரெல்லையும் கொண்டதாக விளங்குகிறது. மருதத்திணைப் பாடல்களை முதலாவதாக கொண்ட நூல் ஐங்குறுநூறு. இந்நூலில் சங்கப்புலவர்கள் உள்ளுறை உவமையை சிறப்பாக கையாண்டுள்ளனர்.*

**தோழி செவிலித் தாயை வற்புறுத்தல் :**

*இருமனங்கள் இணைவதை திருமணம் என்று குறிப்பிடுகின்றனர். மனித வாழ்க்கையில் இது ஒரு இன்றியமையாத நிகழ்வாகும். தனிமனிதனை சமுதாயத்தின் உறுப்பினராக அங்கீகரிக்கும் தகுதியாக திருமணம் விளங்குகிறது. தலைவியை தலைவனுக்கே மணம் முடிக்க வேண்டும் என்ற தோழி செவிலித்தாயிடம் வற்புறுத்திக் கூறினாள். செவிலித் தாயும் பெற்றோரை உடன்படச் செய்தாள். தலைவன் முறைப்படி மணம் செய்ய இல்லத்தாரும் ஏற்றுக் கொண்டனர். இதனால் மகிழ்ந்த தோழி செவிலித் தாய்க்கு இவ்வாறு கூறுகிறாள்.*

*" அன்னாய் வாழி! வேண்டு அன்னை ? கானவர்*

*கிழங்ககழ் நெடுங்குழி மல்க வேங்கை*

*பொன்மலி புதுவீ தாஅம் அவர் நாட்டு*

*மணிநிற மால்வரை மறை தொறும்*

*அணிமலர் நெடுங்கண் ஆர்ந்தன பனியே " 9*

கானவர்கள் மண் அகழ்ந்து கிழங்கெடுத்தனர். தோண்டிய நெடுங்குழி நிரம்புமாறு பொன் போன்ற வேங்கையின் புதுப்பூக்கள் வீழ்ந்து கிடக்கும் கிழங்கைத் தேடிக் கானவர் குழி தோண்டுவர் வேங்கை மரம் புதுப்பூ சொரிந்து குழிகளை நிறைக்கும் என்றது தலைவனுக்குத் தலைவியை மணம் செய்து வைத்ததால் தம் வீட்டில் குறை ஏற்படும். தம்முடைய புகழாலும், கொடை சிறந்த மகிழ்வாலும் நிறைத்துக் கொள்வர். உறவினர் என்பதற்கு உள்ளுறையாய் அமைந்துள்ளது.

வேங்கை புதுப்பூ சொரிந்து குழி நிறைத்தல் - தலைவி புகுந்த வீட்டில் இல்லறம் நடத்துதலால் ஏற்பட்ட மகிழ்வாலும் மனக்குறையை மாற்றுதல்.

கானவர் கிழங்கு அகழ்தல் - தலைவன் தலைவியை கொணர்தல்

கானவர் கிழங்கு அகழ்ந்த குழி - தலைவி தலைவனின் வீடு சென்றதால் இல்லத்தில் நேர்ந்த குறை .

தலைவி புகுந்த வீடு செல்லும் போது எல்லா வீடுகளிலும் அவளது இல்லத்தார்க்கு மனக்குறை ஏற்படும். தலைவியை மணந்த தலைவனின் சிறப்பாலும் அவள் இல்லறம் நடத்தும் திறத்தாலும் அம்மனக்குறை மாறும் என்பது இப்பாடலின் உடனுறை உள்ளுறை வாயிலாக உணர்த்தப்படுகிறது.

**வினை வயிற் சென்ற தலைவன் :**

வினையே ஆடவர்க்கு உயிர் என்பதால் தலைவன் எவ்வித துன்பம் நேர்ந்தாலும் தான் மேற் கொண்ட வினையை செவ்வனே செய்து முடிப்பான்.

**தோழி கூறும் காதலின் தன்மை :**

அன்பு நெறி கொண்டு வாழும் இல்லறத்தின் முக்கிய கடமையாக விருந்தோம்பல் இருந்தது. தலைவியை வரைந்து கொள்வதற்காக பொருள் வயிற் பிரிந்தான் தலைவன். குறித்தகாலத்தில் தலைவன் வராததால் புறவொழுக்கத்தில் ஈடுபட்டிருப்பானோ என்று வருந்துகிறாள் தலைவி அந்த நிலையில் அவளைத் தேற்ற முற்படுகின்றாள் தோழி.

“செந்நலம் செறுவிற் கதிர்கொண்டு களவன்

தண்ணக மண்ணளைச் செல்லும் ஊராற்கு

எல்லளை நெகிழச் சாஅய்

அல்லல் உழப்ப தெவன் கொல் - அன்னாய்” 10

அன்னையே ! செந்நெல் விளையும் பயிரை கவர்ந்து நண்டு தன் மண்ணளையினுள் கொண்டு செல்லும் அத்தகைய ஊருக்கு தலைவன், அவன் பொருட்டு உன்ஒளி வீசும் வளைகள்; நெகிழும் படியாக மெலிந்து துயரப் படுவது எதற்கு என வினவுகிறாள் தோழி.

வயலில் செந் நெல் விளையும் போது கதிரை கவர்ந்து கொண்டு நண்டு மண்ணளையினுள் செல்லும் என்பது பொருள் தேடி சென்ற தலைவனும் தான் ஈட்டிய செல்வத்துடன் விரைந்து தம்மகத்தே வருவான் என்பதற்கு உள்ளுறையாய் அமைந்துள்ளது.

நண்டு - தலைவன்

செந்நெல்கதிர் - தலைவன் ஈட்டிய செல்வம்

மண்ணளை - தலைவியின் இல்லம்

பிரிவுகாலங்களில் வருத்தமுறும் தலைவியற்கு தோழி மிகுந்த ஆறுதலாய் உள்ளாள் என்பது இப்பாடல் உடனுறையின் மூலம் உணர்த்தப்படுகிறது.

**தோழியின் கூற்று :**

தோழி தனக்கென ஒரு வாழ்க்கையை உடையவன் இல்லை.அவளுக்கு தலைவியின் வாழ்க்கையே அவள் வாழ்க்கையாகும். தலைவன் வீட்டார் திருமணம் பற்றி பேச சென்ற போது தலைவியின் வீட்டார் அதற்கு எதிர்த்தனர். அப்போது தோழி தலைவியின் களவொழுக்கத்தை செவிலித் தாய்க்கு கூறி அறத்தொடு நிற்பதாக அமைந்துள்ளது.

“ வேம்பு நனை அன்ன நெடுங்கண் களவன்

தண்ணக மண்அளை நிறைய நெல்லின்

இரும்பூ உறைக்கும் ஊரற்கு இவள்

பெருங்கவின இழப்பது எவன்கொல்? அன்னாய்” 11

வேம்பின் பூ அரும்பு போன்ற நெடுங்கண்களையுடைய அலவனின் குளிர்ந்த உள்ளிடத்தையுடைய மண்ணிடத்து அளையானது நிறையும் படியாக நெற்பயிர் மிகுதியான பூக்கள் உதிர்ந்து கிடக்கும் விளைவயல்களையுடைய ஊரன் தலைவன் அவன் பொருட்டாக நின் மகள் தன் பேரழகினை இழப்பது தான் எதனாலோ! அலவனின் மண்வளை நிறைய நெற்பயிரின் பூக்கள் உதிர்ந்து கிடக்கும் என்றது தலைவனின் இல்லத்தில் அறவழியில் ஈட்டப்பட்ட செல்வம் நிரம்பி கிடக்கும். இத்தகைய வளத்தின் காரணமாகவே தலைவியின் உள்ளம் தலைவன் பால் சென்றது என்பதை குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது.

மண்வளை - தலைவனின் இல்லம்

நெற்கதிரின் பூ - தலைவன் ஈட்டிய பெருஞ்செல்வம்

தலைவனின் அழகு நலம் மட்டுமின்றி அறவழியில் ஈட்டப்பட்ட செல்வத்தையும் மனதுள் கொண்டே தலைவியின் உள்ளம் தலைவன் பால் சென்றது என்பது இப்பாடலின் வாயிலாய் உணர்த்தப்பட்டுள்ளது. இதன் வாயிலாக தலைவியின் மதிநுட்பம் உடனுறையின் மூலம் புலப்படுகிறது.

**பாங்கன் வாயில் வேண்டுதல் :**

*பரத்தமை ஒழுக்கம் மேற்கொண்ட தலைவனுக்கு வாயிலாக தலைவியை வேண்டுகிறான் பாங்கன் வாயில் நேர்வதற்கு இசையும் தலைவனது செயலின் புன்மையை மறைமுகமாக சுட்டிக்காட்ட விரும்புகிறாள் தலைவி.*

*“மனைநடு வயலை வேழம் சுற்றும்*

*துறைகேழ் ஊரான் கொடுமை நாணி*

*நல்லன் என்னும் யாமே*

*அல்லன் என்னும் என்தடமென் தோளே!” **12***

*மனையிலே நடப்பட்ட வயலைக் கொடி படர்ந்து சென்று புறப்பகுதியில் உள்ள வேழத்தினைச் சுற்றி படர்கின்ற துறை பொருந்திய ஊருக்குரியவன் தலைவன். அவன் செய்த கொடுமை அயலாருக்கு தெரிந்து அலர் ஆவதற்கு வெட்கி அவன் எமக்கு நல்லன் என்று வாயால் கூறினோம். அப்படிக் கூறினாலும் ,எம் பெரிய மென்மையான தோள்கள் மெலிந்ததால் அவன் நல்லன் அல்லன்! என்னும் உண்மையை பிறரும் நன்றாக அறியமாறு புலப்படுத்தி விடுமே!*

*மனையில் நடுகிற வயலைக் கொடி தான் சுற்றிப் படர்வதற்கு ஏதுவான பந்தல் மனையருகே இருப்பினும் அதனைவிட்டு மனைப்புறத்தே உள்ள வலிமையற்ற நாணலில் படரும் என்றது, அழகு நலனும் கற்பொழுக்கமும் கொண்ட தலைவியை விட்டு தலைவன் சிறப்பற்ற பரத்தையை நடினான் என்பதற்கு உவம உள்ளுறையாய் அமைந்துள்ளது.*

*வயலைக்கொடி - தலைவன்*

*மனைப்பந்தர் - தலைவி*

*நாணல் - பரத்தை*

*“தலைவன் பரத்தையிடமிருந்து திரும்பி வந்த பின் தலைவியை தேற்றுவதற்காக அவள் காலடியில் வீழ்ந்து வணங்கவும் அந்நிலையில் தலைவனை ஏற்றுக் கொள்ளும் தலைவியின் ஒளிமிக்க முகம் போல தாமரைமொட்டு அலர்ந்து இதழ்விரிந்தது என கலி கூறும்.” **13***

***வாயிலிடம் தோழி கூறியது :***

*தலைவன் புற ஒழுக்கத்தை மேற் கொள்கிறான்;.அந்த நிலையில் ஒருத்தியை விட்டு இன்னொருத்தியிடம் பரந்தமை ஒழுக்கம் மேற்கொள்கிறான். பின்னர் தலைவியை அடைவதற்காய் ஒருவரை ஏவலாய் அனுப்புகிறார். அப்போது வந்த வாயிலிடம் தோழி கூறுவனவாக இப்பாடல் அமைந்துள்ளது.*

*“புயல் புறந்தந்த புனிற்று வளர்பைங்காய்*

*வயலைச் செங்கொடி களவன் அறுக்கும்*

*கழனியூரன் மார்பு பலர்க்கு*

*இழைநெகிழ் செல்லல் ஆக்கும் அன்னாய்” **14***

புயல் வெளியே தூக்கி எறிந்த இளம் பிஞ்சு காய்களையுடைய வயலையின் சிவந்த கொடியினைக் களவன் புகுந்து அறுத்துப் போடும் கழனியைக் கொண்ட ஊருக்கு தலைவன்.அவனது மார்பு உனக்கு மட்டும் அல்லாமல் மகளிர் பலர்க்கும் இழை நெகிழச் செய்யும் துன்பத்தைத் தருவதாகும். புயல் தாக்கியதால் வயலைக் கொடி வருத்தியது என்பது பேறு காலத்தில் தலைவிக்கு நேர்ந்த துன்பத்திற்கு உள்ளுறையாய் அமைந்துள்ளது. வயலைக் கொடியை அலவன் அறுத்து சிதைப்பது தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தால் தலைவி மேலும் துயர்நிலை அடைந்தாள் என்பதற்கு உள்ளுறையாய் அமைந்துள்ளது.

வயலைக்கொடி - தலைவி

பசுங்காய் - புதல்வன்

வயலைக்கொடியை புயல் தாக்குதல் - தலைவிக்கு பேறுகால துன்பம்

வயலைக்கொடியை அவலன் அறுத்தல் - தலைவனின் பரத்தமை
ஒழுக்கத்தால் தலைவி
மேலும் வருந்துதல்

பேறுகாலத்தில் மகளிர்க்கு நேரும் துன்பம் இப்பாடலில் உவம உள்ளுறை மூலம் பதிவு செய்யப் பட்டுள்ளது. அப்போது அவளுக்கு உடனிருந்து உதவ வேண்டிய தலைவன் பரத்தமை ஒழுக்கம் மேற்கொள்வதால் அவர்கள் மேலும் துன்பநிலை அடைவது சொல்லப்பட்டுள்ளது. தலைவர்களின் பரத்தமை ஒழுக்கம் மறைமுகமாக கண்டிக்கப் படுகிறது. தலைவன் பரத்தையரிடம் களவொழுக்கம் மேற் கொண்டான். ஒரு நாள் தலைவன் தலைவியின் இல்லத்திற்கு வந்து தோழியை வாயில் வேண்டினான். அது கேட்ட தோழி வாயில் மறுத்து கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

'நிலம்பக வீழ்ந்த வேர்முதிர் கிழங்கின்
கழை கண்டன்ன தூம்புடைத் திரள்கால்
களிற்றுச் செவி அன்ன பாசடை மருங்கில்
கழூநிவந் தன்ன கொழுமுகை இடை இடை
முறுவல் முகத்தின் பல்மலர் தயங்கப்
பூத்த தாமரைப் புள்இமிழ் பழனத்து
வேப்பு நனை அன்ன நெடுஞ்கண் நீட்ஞெண்டு
இரைதேர் வேண்குருகு அஞ்சி அயலாது
ஒலித்த பகன்றை இருஞ்சேற்று அள்ளல் " 15

கடல் போன்ற பரந்த நிலத்தில் முதிர்ந்த கிழங்கும் மூங்கிலைப் போன்ற தண்டும் யானையின் காது போன்ற விரிந்த பசுமையான இலையும் கழுமரம் போன்ற உயர்ந்த அரும்பும் புன்முறுவல் போன்ற தாமரை மலர்களையும் உடைய வயலில் பறவைகள் ஒலி எழுப்பும். வேம்பின் அரும்பை ஒத்த கண்களையுடையது நண்டு. அந்த நண்டு பரத்தமையின் காரணமாக பிரிந்து சென்றது. வெண்ணிற நாரையைக் கண்டு அஞ்சி பகன்றைக் கொடி படர்ந்து சேற்றிப் படிவில் சென்று மண்வளையுள் புகுந்து மறைந்தது.

*பறவைகள் ஒலிக்கும் பழனத்து நண்டு நாரைக்கு அஞ்சி மண்வளையில் மறையும் என்றது பரத்தையர் ஒழுக்கம் மெற்கொண்ட தலைவன் பழிக்கு அஞ்சி தோழியிடம் வாயில் வேண்டுவதற்கு உள்ளுறையாய் அமைந்தள்ளது.*

| | | |
|---|---|---|
| *பழனத்து நண்டு* | - | *பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்ட தலைவன்நண்டு நாரைக்கு அஞ்சி* |
| *மண்வளையில் செல்லுதல்* | - | *தலைவன் பழிக்கு அஞ்சி தோழியை அடைதல்.* |

*பரத்தையர் ஒழுக்கம் மேற்கொள்ளும் போது நாண உணர்வு மிகுந்த தலைவர்கள் அவ்வொழுக்கத்தை கைவிட்டு தலைவியை சேர முயன்றுள்ளனர் என்பதால் அப்பாடல் உவம உள்ளுறை ஆயிற்று.*

***பரத்தமை ஒழுக்கம் கொண்ட தலைவன் :***

*தலைவன் தலைவியை பிரிந்து பரத்தமை ஒழுக்கம் மேற்கொண்டான்.பின்னர் முதல் பரத்தையை துறந்து வேறொரு பரத்தையின் மீது நாட்டம் கொண்டான் இதனை அறிந்த தலைவி தலைவனுக்க இவ்வாறு உரைக்கின்றாள்.*

*'நறுஅடி மாஅத்து விளைத்துகு தீம்பழம்*
*நெடுநீர்ப் பொய்கைத் துடுமேன விழூஉம்*
*கைவண்மத்தி கழாஅர் அன்ன*
*வதுவை யயர வீரும்புதி நீயே " **16***

*மாமரத்தின் மணம் மிகுந்த முதிர்ந்த கனி ஆழ்ந்த நீரையுடைய பொய்கையில் விழும்.அத்தகைய வளம் மிகுந்;த ஊரில் நல்ல பெண்களை நாடி சென்று நீயும் மணம் செய்வாய் என்ற தலைவி கூறினாள். மாவின் முதிர்ந்த கனி தானகவே குளத்து நீரில் விழும் என்றது, பரத்தையர் சேரியில் இளம் கன்னியர் தாமாகவே தலைவனின் வலையில் விழுவர் என்பதற்கு உள்ளுறையாய் அமைந்துள்ளது.*

*மாவின் முதிர்ந்த கனி - பரத்தையர்*

*குளத்துநீர் - வலை*

*பரத்தையர் தலைவன் வலையில் விழுதல் மிக மிக இயல்பான நிகழ்வாகும். அழகு நலம் மிக்க பரத்தையர் பொருள் வளம் மிக்க தலைவனின் வலையில் விழுவது இயல்பான நிகழ்வு. எனவே தலைவன் தான,; தன் மனத்தைக் கட்டுப்படுத்தி பரத்தையிடம் செல்வதை தவிர்த்தல் வேண்டும் என்னும் கருத்து உணர்த்தப்படுகிறது.*

***தலைவியின் பழிச் சொல் :***

*காதல் பரத்தை ஒருத்தி தலைவி தன்னை பழித்து பேசியதாக அறிகிறாள். அப்போது அவள் தலைவனிடம் இதனை எடுத்துக் கூறி தலைவியை பழித்து பேசுவதாக அமைந்துள்ளது.*

*'பகன்றைக் கண்ணீப் பல்லான்*

*கரும்பு குணிலா மாங்கனி உதிர்க்;கும்*

*யாணன் ஊர ! நின் மனையோள்*

*யாரையும் புலக்கும் எம்மை மற் றெவனோ "17*

*பகன்றைப் பூக்களைத் தொகுத்துத் தலைக்கண்ணியாக சூடிய கோவலர்கள் பல ஆநிரைகளை உடையவர்கள். கரும்பை கையில் குறுந்தடியாக கொண்டு எறிந்து மாங்கனிகளை உதிர்த்தனர். அத்தகைய புது வருவாயினை உடையவன் நாடன். நின் மனைவி யாவரையும் புலந்து பேசினாலும் எம்மையும் புலந்து கூறுவது அதற்கோ என்றாள். கோவலர்கள் கரும்பை உண்பதோடு அதனைக் குறுந்தடியாக பயன்படுத்தி மாவின் கனியையும் பறித்து உண்பர். இது தலைவன் பரத்தையை நுகர்ந்த பின் அவர்களை இகழ்ந்து கூறி தலைவியிடமும் சென்று நலன் உண்ணும் இயல்பினன் என்பதற்கு உள்;ளுறையாய் அமைந்துள்ளது.*

*கோவலர் - தலைவன்*

*கரும்பு - பரத்தை*

*மாவின்கனி - தலைவி*

*பெண்களை தலைவர்கள் மனைவி நிலையிலும் பரத்தை நிலையிலும் வைத்து சூழலுக்கேற்ப இன்பம் துய்க்கின்றனர் என்பது இதன் மூலம் புலப்படுகிறது. உள்ளுறை கவிதையின் உள்ளே வரும் ஒரு அமைப்பு கூறாகும். செய்யுளில் வேறுபட்ட பல கூறுகளை ஒன்று படுத்திக் கவிதை தரும் பொருளுக்கு உருவம் கொடுக்கறது. உள்ளுறையின் செயல்பாடு பற்றி ஏ.கே. ராமனுஜம் உள்ளுறைகளை உள்ளமைப்புகள் என்று செல்லலாம். இவ்வுள்ளமைப்பானது உரிப்பொருளான மனிதக் காட்சியைக் கருப்பொருட்களான நிலம் அதிலுள்ள பொருட்கள் ஆகியவற்றோடு இணைக்கிறது என்கிறார். மனித உணர்வுகளிலெல்லாம் தலையாய காதலின் தன்மையைப் பலவாறு புலப்படுத்திப் படிப்போர்க்குப் பெருமகிழ்ச்சியை உண்டாக்கும். தலைவனும் தலைவியும் தோழியும் செவிலித்தாயும் நடமாடுகின்ற காட்சிகளில் இயற்கைப் பொருத்தமும் அழகும் கொண்ட பின் புலமாக இருந்து இலக்கிய இன்பத்தை புலப்படுத்துகிறது. சிறந்த வாழ்வியல் உண்மைகள் நம் வாழ்க்கையிலே ஊடுருவி அமைந்து நமக்குப் போதிய அளவு பழக்கமானவையாக உள்ளன. கணவனும் மனைவியும் மேற்கொண்டொழுக வேண்டிய சிறந்த வாழ்வியல் நெறிகளும் உண்மைகளும் உணர்த்தப்படுகின்றன.*

**தொகுப்புரை :**

*திருமணத்திற்கு முன்பு உள்ள களவில் தலைவி தலைவன் தோழி ஆகியோரின் தன்மைகளையும், திருமணத்திற்கு பின் உள்ள கற்பில் அவர்களின் நிலையும் உள்ளுறை உவமம் வாயிலாக விளக்கப்பட்டுள்ளது. உள்ளுறை உவமம் ஐங்குறுநூற்று பாடலில் தன்மையை உயர்த்திக் காட்டவும் பயன்படுகிறது. சங்க இலக்கியத்தில் ஐங்குறுநூற்றில் உள்ளுறை மூலம் பழந்தமிழரின் வாழ்வு இசை கூத்து நீதி ஆகியவை அறியப்பட்டுள்ளது. உள்ளுறை உவமம் கையாண்டுள்ள விதம் அவர்களின் உலகியல் அறிவினையும் அதை மக்களுக்கு திறம்பட விளக்கும் அறிவினையும் புலனாக்குகிறது என்பது குறிப்பிடப் பட்டுள்ளது. உள்ளுறை உவமமையால் சங்க கால மக்களின் வாழ்வியலை அறிய முடிகிறது. படைப்பு நெறியை அறியமுடிகிறது.*

உட்கருத்து ஒன்றை வைத்து வெளிப்படையாக வேறென்றை கூறுவது உள்ளுறை உவமம், இத்தன்மையில் தலைவி, தோழி, தலைவன் ஆகியோர் தத்தம் நிலைகளுக்கேற்ப உள்ளுறை உவமம் கூறப்படுகிறது.

**மேற்கோள்கள் :**

1. இளம்பூரணர் (உ.ஆ) தொல்காப்பியம் - பா. 296 ப.381
2. மேலது பா.51 ப.62
3. நம்பியகப் பொருள் பாடல் - 147 ப.274
4. சு. செல்லைய பிள்ளை மாறன் அகப்பொருள் ப.87
5. தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் ப.402
6. தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் ப.407
7. தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் ப.407
8. முனைவர் அ.தட்சிணாமூர்த்தி (உ.ஆ) ஐங்குறுநூறு பா.209 ப.444
9. முனைவர் வ.த.இராமசுப்பிரமணியம் அகநானூறு பா.159 ப.291
10. கார்த்திகேசு சிவதம்பி (உ.ஆ) தொல்காப்பியம் கவிதையும் ப.21
11. முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியம் நற்றிணை பா - 35 ப.60
12. தமிழண்ணல் (உ.ஆ) சங்கமரபு ப.254
13. முனைவர் அ.தட்சிணாமூர்த்தி (உ.ஆ) ஐங்குறுநூறு பா - 19 ப.45
14. முனைவர் வ.த.இராமசுப்பிரமணியம் அகநானூறு பா176 . ப.317
15. முனைவர் வ.த.இராமசுப்பிரமணியம் அகநானூறு பா.43 ப.92
16. முனைவர் வ.த.இராமசுப்பிரமணியம் அகநானூறு பா.எ.87 ப.189
17. முனைவர் வ.த.இராமசுப்பிரமணியம் அகநானூறு பா.எ.95 ப.210

**துணை நூற்பட்டியல்:**


1. இளம் பூரணர் (உ.ஆ) — தொல்காப்பியம்
   திருநெல்வேலி சைவ சித்தாந்த
   நூற்பதிப்புக் கழகம்
   1/140 பிரகாசம் சாலை
   சென்னை-1
   1974
2. இளம் பூரணர் (உ.ஆ) — தொல்காப்பியம்
   சாரதா பதிப்பகம்
   6/16இ தோப்பு வேங்கடாசலம் தெரு
   திருவல்லிக்கேணி
   சென்னை-600 005
3. கந்தையா ந.சி (உ.ஆ) — செவ்விலக்கியக் கருவூலம்
   பத்துப்பாட்டு
   தமிழ்மண் அறக்கட்டளை
   சென்னை.
4. கார்த்திகேசு சிவத்தம்பி — தொல்காப்பியமும் கவிதையும்
   நியூசெஞ்சுரி புக் ஹவுஜஸ் பி.லிட்
   41-B இ சிட்கோ,
   இண்டஸ்டிரியல் எஸ்டேட்

அம்பத்தூர், சென்னை.600 098

5. கோவிந்த ராசமுதலியார் கா.ர. — அகப்பொருள் விளக்கம்
கழக வெளியீடு
சென்னை.

6. சிவலிங்கனார் — தொல்காப்பிய உரைவளம்
பொரளதிகாரம், சென்னை
1998

7. ஞான மூர்த்தி தா.ஏ — இலக்கிய திறனாய்வியல்
ஐந்திணைப் பதிப்பகம்
279, பாரதி சாலை
திருவல்லிக் கோணி
சென்னை-600 005

8. தமிழண்ணல் — ஒப்பிலக்கிய அறிமுகம்
மீனாட்சி புத்தக நிலையம்
மயூரா வளாகம்,
48, தானப்ப முதலிதெரு
மதுரை-625 001
மு. ப . 1973

9. தமிழண்ணல் — சங்க மரபு
மீனாட்சி புத்தக நிலையம்
மயூரா வளாகம், 46,
தானப்ப முதலிதெரு
மதுரை-625 001

10. முனைவர் ப. பெரிய சாமி — அகத்திற்குள் புறம்
கௌரா ஏஜென்சீஸ்
10/14 தோப்புவேங்கடா சலம் தெரு
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005

11. மாணிக்கம் வ. சு. ப. — தொல்காப்பிய புதுமை
ராமையா பதிப்பகம்
சென்னை.600 098

12. வெள்ளை வாரணன் — தொல்காப்பிய பொருளதிகாரம்
உவமையியல் உரைவளம்
மதுரை காமராசர் பல்கலைக்
கழகம்
1985.

13. முனைவர் பெ. சுயம்பு — பாரதி பதிப்பகம்,113, இராஜீவ்
தெரு
திசையன்விளை-627657

14. சந்திரா கிருட்டிணன் — நகையெனும் மெய்ப்பாடு
நியூசெஞ்சுரி புக் ஹவுஜஸ் பி.லிட்
41-B , சிட்கோ,
இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை.